விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 22 சனிக்கிழமை (06.01.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 18

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சீமெந்து

## விமானத் தாக்குதலை கண்டித்து கிளிநொச்சியில் கண்டனப் பேரணி

(கிளிநொச்சி)

மன்னார் இலுப்பைக்கடவையில் விமானப்படையினர் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலை கண்டித்து கிளிநொச்சியில் நேற்று கண்டனப் பேரணி நடைபெற்றது.

கிளிநொச்சி அரச செயலக வளாகத்திலிருந்து நேற்றுக் காலை 11 மணியளவில் தொடங்கிய கண்டனப் பேரணி ஏ-9 வீதி வழியாக நகர்ந்து கிளிநொச்சி அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் உயர் ஆணையகத்தின் வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்தை சென்றடைந்தது.

பேரணியின் ஒழுங்கமைப்பாளர்களினால் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதியிடம் மனுக்கள் கையளிக்கப்பட்டன. அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பதவியேற்றபின் இலங்கைத் தீவில் சுபீட்சம் என்பதற்கு பதிலாக நாளாந்தம் மரண ஓலங்களே மலிந்துள்ளன.

இதில் பிரதான இலக்கு தமிழர் தாயகமாகவே உள்ளது.வயது (06 ஆம் பக்கம் பார்க்க)

## விவசாயத் திணைக்கள இரு அதிகாரிகள் கிளைமோர்த் தாக்குதலில் உயிரிழப்பு

### நெடுங்கேணியில் சம்பவம்

(வவுனியா)

வவுனியாவில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான நெடுங்கேணியில் நேற்றுக் காலை இடம் பெற்ற கிளைமோர்த் தாக்குதலில் விவசாயத்துறை அதிகாரிகள் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

நெடுங்கேணியில் இருந்து கனகராயன் குளத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த வவுனியா விவசாய (06 ஆம் பக்கம் பார்க்க)



# கொழும்பு பயணிகள் பஸ்ஸில் நேற்று மாலை குண்டு வெடிப்பு

## 8 பயணிகள் பலி; 50 பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு அருகில் உள்ள நிட்டம்புவ பகுதியில் பயணிகள் பஸ் ஒன்றில் இடம் பெற்ற குண்டு வெடிப்பில் எட்டு பயணிகள் உயிரிழந்துள்ளனர். 50 பேர் வரையில் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் பத்துப் பேரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக நேற்றிரவு தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தினையடுத்து கொழும்பையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பு கிளைமோர் 4 அதிரடிப்படையினர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாழங்குடாவில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் சிறப்பு அதிரடிப்படையினர் 4பேர் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

தாழங்குடா கல்முனை வீதியில் நேற்றுக் காலை 9.05 மணிக்கு சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்ட அதிரடிப்படையினர் மீது இத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அதிரடிப்படையினரில் 4 பேர் கொல்லப்பட்டனர். ஒருவர் காயமடைந்தார் மேலும் பொதுமகன் ஒருவரும் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு-3,5)

## திருமலை கிளைமோர்

[illegible]

## கொக்குவிலில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் ஆடியபாதம் வீதியில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த இளைஞன் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

தனது உறவினர் ஒருவரின் பிள்ளையை பாடசாலையில் விட்டு விட்டு திரும்பும் வழியில் சுடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. சைக்கிளில் சென்ற இனந்தெரியாதோரால் நேற்றுக் காலை 8.30 மணியளவில் அவர் சுடப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

சுட்டுக்கொல்லப்பட்டவர் கொக்குவில் கோயில் வீதியைச் சேர்ந்த நவரத்தினம் மனோராஜ் (வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

[illegible]

பொதுமகன் ஒருவரும் காயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-3,5)

## திருமலை கிளைமோர் இரு கடற்படையினர் காயம்

(திருகோணமலை)

திருகோணமலையில் நேற்று நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் இரு கடற்படையினர் படுகாயமடைந்துள்ளனர். திருகோணமலை உப்புவெளி வீதியில் அலெஸ் தோட்டப் பகுதியில் நேற்று முற்பகல் 11.15 மணிக்கு அடையாளம் தெரியாத நபர்களால் இத்தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்பட்டது.

இதில் கடற்படையைச் சேர்ந்த இருவர் படுகாயமடைந்தனர். இத் தாக்குதலைத் தொடர்ந்து அப் பகுதியில் பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பாதுகாப்புத் தொடர்பான ஊடக மத்தியநிலையம் தெரிவித்துள்ளது. (ச)

## அலம்பில் பகுதியில் கிபீர்த் தாக்குதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு அலம்பில் பகுதியிலுள்ள இடம் பெயர்ந்த மக்கள் குடியிருப்புக்கள் மீது நேற்று கிபீர் விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தியுள்ளன. அலம்பில் பகுதியில் பூந்தாய் கிராமத்தில் ஆழிப்பேரலையால் இடம் பெயர்ந்தோர் குடியிருப்புக்கள் மீது கிபீர் விமானங்கள் குண்டுகளை வீசியதாக தெரிவிக்கப்பட்டது.

கிபீர் விமானங்களால் 12 குண்டுகள் வீசப்பட்டன. இந்த (06 ஆம் பக்கம் பார்க்க)

இச் சம்பவத்தினையடுத்து கொழும்பையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் வந்த பொருட்கள் தனியார் ஊடாகவும் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திற்கு கப்பல் மூலம் எடுத்து வரப்பட்ட பொருட்கள் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனியார் கடைகள் ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

இவ் விநியோகத்திற்காக ஒதுக்கப்பட்ட பொருட்களுக்கான வழங்கற்கட்டளைகளை சகல பல.நோக்கு கூட்டுறவு சங்கங்களையும் இன்று மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்பு செயலகத்திலிருந்து காலை 9.30 மணி முதல் ஒரு மணி நேரத்திற்குள் பெற்று உடனடியாக களஞ்சியத்திலிருந்து எடுத்துச் செல்லுமாறு அரச அதிபர் கேட்டுள்ளார்.

இதேவேளை தனியார் கடை உரிமையாளர் தமக்கான வழங்கற் கட்டளையை தமது பிரதேச செயலரிடம் பெற்று பல. நோக்குக் கூட்டுறவு சங்கத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அவர் தெரிவித்துள்ளார்.

பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் தனியார் கடைகளிற்கு (06 ஆம் பக்கம் பார்க்க)

சுட்டுக்கொல்லப்பட்டவர் கொக்குவில் கோயில் வீதியைச் சேர்ந்த நவரத்தினம் மனோராஜ் (வயது 24) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது மரணம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட யாழ்.மாவட்ட பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு பிரேதபரிசோதனையின் பின் சடலத்தை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-3,5)

## இன்று கப்பல் சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமலை கப்பல் சேவை இன்று இடம் பெறவுள்ளது. சுமார் 300 பயணிகளுடன் கப்பல் புறப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இக் கப்பலில் பயணத்தை மேற்கொள்ளவுள்ளோர் இன்று மாலை 7.30 மணிக்கு சிங்கள மகாவித்தியாலயத்தில் ஒன்று கூடு மாறு கேட்கப்பட்டுள்ளனர். (ச)

# திடீர்த் தேர்தலுக்கு அரசு திட்டம் மக்கள் விடுதலை முன்னணி தகவல்


(கொழும்பு)

திடீர் பொதுத்தேர்தல் ஒன்றை நடத்தும் நோக்கத்துடனேயே அரசாங்கம் மக்களைக் கவரும் நிகழ்ச்சி நிரலை தற்போது முன்னெடுத்து வருகின்றது. மக்களுக்கு வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றாது நாளாந்தம் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையை மக்கள் இழந்துவிட்டனர் என ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் கே.லால்காந்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் நம்பிக்கையை இழந்து வரும் அரசாங்கம் தேர்தல் ஒன்றுக்குத் தயாராகி வருகின்றது என்பதுதான் உண்மை ஆனால் இது மறைக்கப்படுகின்றது. இது போன்றதொரு சந்தர்ப்பத்தில் அரசாங்கம் உண்மைகளை வெளியிடாது. (06 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



## தேசமான்ய

# ஏ. வை. எஸ். ஞானம்

- டோக்கியோ சீமெந்து குழும கம்பனி.
- சென்ற் அன்ரனிஸ் ஹாட் வெயர் (பிறை) லிட்.
- சென்ற் அன்ரனிஸ் தொழில் குழுமம் (பிறை) லிட்.
- சென் அன்ரனிஸ் கொன் சொலேட்டட் லிட்.
- சிலோன் சிந்தெற்றிக் புடைவை ஆலை லிட்.
- றைனோ கூரைத் தகடு தொழிலகம் லிட்.
- அலக்சான்டிரா தொழில் (இலங்கை) லிட்.
- சீகொன் பின்னல் கம்பனி (பிறை) லிட்.
- சான் பாஷன் லிட்.
- தென்னாசிய முதலீடு (பிறை) லிட்.
- எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் சிலோன் லிட்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்
மனித நேயமும் கருணை உள்ளமும் கொண்ட பிரபல தொழில் அதிபர்
தேசமான்ய ஏ.வை.எஸ்.ஞானம்
அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்வதுடன்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

## கஜமுகன் ஹாட்வெயர்


147,149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 222 2833

(C-717)

# மக்களுக்கான ஜனநாயக உரிமைகளை பெற்றுக் கொடுக்க அரசு பின்நிற்காது

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பகுதியில் வாழ்கின்ற மக்களுக்கு ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு இந்த அரசாங்கம் ஒருபோதும் பின்நிற்கப் போவதில்லை.

அதற்காகப் பாதுகாப்புத் தரப்பினர் வழங்குகின்ற சேவையைப் போல தாதிகளும் சேவையாற்ற வேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தாதியர்கள் சேவையில் இணைத்துக் கொள்வதற்காக 2 ஆயிரத்து 500 பேருக்கான அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த வைபவம் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் கூறியதாவது;

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுடன் ஒப்பிடும் போது சுகாதாரத் துறையில் இலங்கை நல்ல நிலையில் இருக்கின்றது.

இலங்கைத் தாதிமார்களுக்கு உலக நாடுகளில் மிகவும் கேள்வியிருக்கின்றது. மகிந்த சிந்தனையின் வேலைத்திட்டத்தின் கீழ் சுகாதாரத் துறையின் தாதி சேவைக்கு 15 ஆயிரம் பேர் புதிதாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

தாதியர் சேவையில் ஈடுபடுகின்ற இந்த நாட்டைச் சேர்ந்தவர்களுக்கு வெளிநாடுகளில் கூடுதலான கேள்வியிருக்கின்றன. இந்தத் தொழிலில் மட்டுந்தான் லஞ்சம் பெற முடியாது. ஆனால் இதர தொழில்களில் சிறு பதவி வகிப்போர் முதல் உயர் பதவிகள் வகிக்கின்ற பலர் லஞ்சம் பெறுகின்றனர். இவ்வருடத்திற்குள் 500 தாதிகளை ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கு அனுப்பி அவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

சுனாமி அனர்த்தம்ஏற்பட்ட போது மருத்துவத் துறையில் சேவையாற்றிய சகலரும் பொறுப்புடன் தங்களது சேவைகளைச் செய்தனர். சுகாதாரத் துறையிலிருந்து பொதுமக்களை பிரிக்க முடியாது என்றார். (ச-5)

# நாய்களுக்கு தடுப்பூசி

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு இதுவரை ஏ.ஆர்.வி.தடுப்பூசி ஏற்றாதவர்கள் நகரசபைப் பொது சுகாதாரப் பரிசோதகருடன் தொடர்பு கொண்டு நாய்களுக்கான ஏ.ஆர்.வி.தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளுமாறு நகரசபை செயலாளர் கே. அமிர்தலிங்கம் கேட்டுள்ளார். (ச-52)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

வல்வெட்டித்துறைப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகளை நீக்கும் முகமாக கட்டாக்காலி நாய்களை வல்வெட்டித்துறை நகரசபை அழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கடந்த வாரம் 66 கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்பட்டதாக நகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ச-52)

# வாகனத் தரிப்பிடத்தை விரிவுபடுத்த நடவடிக்கை

## மாநகர ஆணையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப் பகுதியிலும் வர்த்தக நிலையங்களின் முன்பாகவும் வாகனங்கள் நிறுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டதனால் பொது மக்கள் எதிர்நோக்கியுள்ள சிரமங்களை கருத்திற் கொண்டு கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள வாகனப் பாதுகாப்பு நிலையத்தினை விரிபுபடுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்தார்.

இப் பாதுகாப்பு நிலையத்தில் கடந்த காலங்களில் துவிச்சக்கர வண்டிகள் மட்டும் நிறுத்தப்பட்டு வந்ததாகவும்இவற்றினை விரிவுபடுத்துவதன் மூலம் ஏனைய வாகனங்களையும் நிறுத்த முடியும் என அவர் மேலும் கூறினார். (எ-133)

## மருந்துகளை பெற்றுக் கொள்ளலாம்

சுகாதாரத் திணைக்களத்தில் பதிவு செய்து பணம் செலுத்தியவர்களுக்கான மருந்துகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவற்றினை எதிர் வரும் திங்கள் முதல் புதன்கிழமை வரைக்கும் அலுவலக நேரத்தில் யாழ்.ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம் என வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (ச)

# முகாமைத்துவ உதவியாளர் பரீட்சை பரீட்சை மண்டபங்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் வகுப்பு III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை வேறு மண்டபத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகள் மாற்றம் செய்யப்பட்டுள்ள பாடசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சைக்குத் தோற்றுமாறும் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

மாற்றம் செய்யப்பட்ட பரீட்சை மண்டபங்கள் வருமாறு,

யா/வேம்படி மகளிர் கல்லூரி மண்டப இலக்கம் ஒன்றிற்கு யா/சென்.மேரிஸ் வித்தியாலயத்திலும்(ஓ.எல்.ஆர்.), மண்டப இலக்கம் இரண்டிற்கு யா/மத்திய கல்லூரியிலும் மண்டப இலக்கம் மூன்றுக்கு யா/திருக்குடும்பக்கன்னியர் மடம் வித்தியாலயத்திலும் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. (ச)

# சுவாமி விவேகானந்தரின் ஜன்ம தினம் அனுஷ்டிப்பு

(பருத்தித்துறை)

சுவாமி விவேகானந்தரின் ஜன்மதினம் எதிர்வரும் 10 ஆம் திகதி பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அதிகாலை 5.30 மணிக்கு மங்கள ஆராதனையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். இதே வேளை 12 ஆம் திகதி தொடக்கம் பாடசாலைகளில் சுவாமி விவேகானந்தர் தேசிய இளைஞர் தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.(ச-52)


சுவாமியே சரணம் ஐயப்பா

வியாவில் ஐயனார் கோவில்

காரைநகர்

மகரஜோதிப் பெருவிழா

யாழ்.மாவட்ட 18ம் படி குருசாமி தாவடி அ.இந்துதாஸ் அவர்களின் ஆசியுடன் நிகழும் மங்களகரமான விய வருடம் 07.01.2007 ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு ஐயப்பப் பெருமானுக்கு மகரஜோதிப் பெருவிழா நடைபெற திருவருள் கூடியுள்ளது.

கிரியைகள்

சாஸ்தாபீடம்

பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள்

தலைமையில் நடைபெறும்.

தாவடியூர் தானுவாசு தேவக்குருக்கள் தலைமையில் படிப் பூசை நிகழ்வு இடம்பெறும். குருசாமிகளையும் மாலை அணியப் பெற்ற சாமிகளையும் அடியார்கள் அனைவரையும் கலந்து ஐயப்பன் அருள் பெற்றுய்யும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

விசேட நாதஸ்வர, தவில் கச்சேரி இடம்பெறும்.

| நாதஸ்வரம் வித்துவான்கள் | தவில் வித்துவான்கள் |
| --- | --- |
| N.K.K.பவப்பிரியன் | R.முருகானந்தம் (நடுவில்) |
| R.சிவகுமார் | B.நர்மதன் (முது) |
| K.நாகதீபன் | S.செந்தில்நாதன் |

அடியார்கள் அனைவரையும் மகேஸ்வர பூஜையில் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அனுசரணை:- கனுமாத்தையா ஞாபகார்த்தமாக காலி மாணிக்கம்ஸ்

வியாவில், காரைநகர். (c-719) ஆலய அறங்காவலர்.


# பல்கலைக்கழக மாணவன் கைது மாணவர் அமைப்புக்கள் கண்டனம்

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதியாண்டு மாணவன் அருணகிரிநாதன் நிருபராஜ் கைது செய்யப்பட்டமைக்கு யாழ்.மாவட்ட மாணவர் அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் 22 ஆம் திகதி பல்கலைக்கழகச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கவுள்ள நிலையில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளமையானது அச்சத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது.

பல்கலைக்கழகச் செயற்பாடுகளை மீள ஆரம்பிப்பது தொடர்பில் விரும்பமில்லாத சக்திகளின் சதி வேலையாகவே இதனைத் தாம் உணர்வதாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. இச் சம்பவத்தினை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம், யாழ்.மாவட்ட தமிழ் மாணவர் ஒன்றியம் என்பன கடுமையாகக் கண்டித்துள்ளன.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டமை மற்றும் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாகவும் அக் கண்டன அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

# ஆயுதம் தாங்கிய குழுவால் நகைகள் கொள்ளை

## கொற்றாவத்தையில் சம்பவம்

(துன்னாலை)

வடமராட்சி கொற்றாவத்தைப் பகுதியில் ஆயுத முனையில் கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

கடந்த 25 ஆம் திகதி இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முறையிடப்பட்டுள்ளது. அன்றைய தினம் இரவு 7.30 மணிக்கு மின்சாரம் தடைப்பட்ட நேரத்தைப் பயன்படுத்தி உள்ளே நுழைந்தஆயுதம் தாங்கிய திருடர்கள் அங்கிருந்த 27ஆயிரம் ரூபா பணத்தையும் 15 பவுண் நகையையும் கொள்ளையிட்டுச் சென்றதாகக் கூறப்பட்டது.

வீட்டைச் சோதனையிடுவதாகக் கூறி உள்ளே நுழைந்த திருடர்கள் இச் சம்பவத்தில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-101)

# பங்கீட்டு அட்டைக்கு உருளைக்கிழங்கு

இந்தியாவிலிருந்து எடுத்து வரப்பட்ட 200 மெற்றிக்தொன் உருளைக்கிழங்கு ஒரு கிலோ 50 ரூபாவிற்கு நாளை முதல் குடும்ப அட்டைக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக வழங்கப்படவுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வலம்புரிக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில், ஒன்று அல்லது இரண்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களிற்கு 500 கிராமும் மூன்று அல்லது நான்கு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு ஒரு கிலோவும் 5அங்கத்தவர் அதற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு ஒன்றரைக்கிலோவும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.(ச-5)

# 2007 புத்தாண்டு பலன்கள்



## மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)

சாதனைகள் புரிந்து எப்போதும் முன்னணியில் இருக்க வேண்டும் என்கிற விருப்பத்தை உடைய மேட ராசி நேயர்களே!

உங்களுக்கு இந்த ஆங்கிலப் புத்தாண்டு ஒரு எதிர்பார்ப்புடன் ஆரம்பமாகிறது. அதாவது ஏமாற்றத்தைத் தவிர்த்து, மாற்றங்களை நோக்கிப் பயணப்படப் போகிறீர்கள். இராசியாதிபதி, செவ்வாய் கஷ்டத்தில் மறைந்திருந்தாலும் ஆட்சி பலம் பெற்று குருவுடன் சஞ்சரிப்பதால் தேக ஆரோக்கியம் சீராகும். மருத்துவச் செலவுகள் குறையும்.

சுகஸ்தானத்தில் இந்த ஆண்டு ஜுலை வரையில் சஞ்சரிக்கும் சனி பகவான், குருபகவானின் கனிந்த பார்வையில் உள்ளார். எனவே தாயார் வழியில் பெரிய பாதிப்புகள் ஏற்படாது. இலாப ஸ்தானத்தில் உள்ள ராகு பகவான் உங்கள் வீட்டுக் கதவை அதிர்ஷ்ட தேவதையின் மூலம் தட்டுவார். கேது பகவான் பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் அமர்ந்திருப்பதால், சிறு குழப்பங்களுக்கு இடையே உங்கள் முயற்சிகள் கைகூடும். குருபகவானின் அருட்பார்வை அயன சயன மோட்ச ஸ்தானத்தின் மீதும், தனம் வாக்கு குடும்ப ஸ்தானத்தின் மீதும், சுகஸ்தானத்தின் மீதும் படிவதால் குடும்பத்தில் வசதி, வாய்ப்புகள் பெருகும். வழக்கு விஷயங்களில் எதிர்பார்த்த முடிவு கிடைக்கும்.

உறவினர்களின் வருகை யினால் அனுகூலங்கள் அடைவீர்கள். பொருளாதாரத்தில் இருந்து வந்த தொய்வுகள் விலகி, சேமிப்புக்கு வழியேற்படும். அதே சமயம் சிறு விரயங்களையும் நீங்கள் சந்திக்க நேரிடும்.

திட்டமிட்ட காரியங்களில் நீங்கள் துணிச்சலுடன் தைரியமாக ஈடுபடுவீர்கள். மூத்த சகோதர , சகோதரிகளுடனான உறவில் நெருக்கம் அதிகரிக்கும். சுபகாரியங்களுக்கான பேச்சுவார்த்தைகள் நடக்கத் தொடங்கும். கேதுபகவானின் அருளினால் உங்கள் ஆன்ம பலம் அதிகரிக்கும். தகப்பனாரின் ஆதரவு சிறிது குறைந்தாலும், பெரிய பாதிப்புகள் ஏற்படாமல் குருபகவானால் காக்கப்படுவீர்கள். சமூகத்தில் உங்கள் செல்வாக்கு அதிகரிக்கும்.

உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடும். ஆனாலும் சக ஊழியர்களின் உதவிகளினால் வேலைகளைக் குறித்த காலத்திற்குள் முடித்துவிடுவீர்கள். மேலதிகாரிகள் உங்களின் கோரிக்கைகளை உணர்பூர்வமாக பரிசீலித்து, உங்களுக்குச் சாதகமான முடிவுகளை எடுப்பார்கள்.அதேசமயம் இந்த ஆண்டில் உங்களுக்கு பணியிட மாற்றம் கிடைக்க வாய்ப்பில்லை.

வியாபாரிகளுக்கு வியாபாரத்தில் நிலவி வந்த தடைகள் நீங்கும். இலாபம் பெருகும். கூட்டாளிகளின் ஒத்துழைப்பைப் பெற்றுச் செயல்படின் உங்களின் அனைத்து முயற்சிகளும் வெற்றியடையும்.

விவசாயிகளுக்கு கொள்முதலில் நல்ல இலாபம் கிடைக்கும். குறிப்பாக கால்நடைகளை வைத்திருப்போர், எதிர்பார்த்த வருமானத்தைப் பெறுவார்கள். அதே சமயம் நீர்ப்பாசன வசதிகளுக்காக நீங்கள் எடுக்கும் முயற்சிகள், முழுமையான வெற்றியைக் கொடுக்காது. அதனால் அத்தகைய முயற்சிகளைத் தவிர்த்து பழைய கடன்களை திருப்பிச் செலுத்துங்கள்.


அரசியல்வாதிகள் திட்டமிட்ட காரியங்கள் அனைத்தையும் வெற்றிகரமாக முடிப்பார்கள். எனினும் உங்களுக்கு கட்சியில் எதிர்ப்புகள் அதிகரிக்கும். ஆகவே உட்கட்சிப் பூசல்களில் மாட்டிக் கொள்ளாமல் தப்பித்துக் கொள்வதே புத்திசாலித்தனம்.

கலைத்துறையினர் பழைய ஒப்பந்தங்களை நன்கு முடித்துக் கொடுத்த பிறகே புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திடவும், ரசிகர்களின் மனதைப் புண்படுத்தாமல் நடந்து கொள்ளவும், மற்றபடி சக கலைஞர்கள் உங்களுக்கு உதவக்கூடிய நிலையில் இருப்பதால் அவர்களை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

இந்த ராசி பெண்மணிகள் குடும்பத்தில் ஒற்றுமையைக் காண்பார்கள். மேலும், உறவினர்களை அனுசரித்துச் சென்று உங்கள் செல்வாக்கை அதிகரித்துக் கொள்ளுங்கள்.

மாணவமணிகள் படிப்பில் முழு கவனத்தைச் செலுத்தினால் மட்டுமே தக்க முன்னேற்றத்தைக் காண்பார்கள். அதனால் தேவையில்லாத பிரச்சினைகளில் சிக்க வேண்டாம். மற்றபடி விளையாட்டுகளில் ஈடுபட்டு பாராட்டுக்களைப் பெறுவீர்கள்.

*பரிகாரம்* :-சிறு, சிறு சங்கடங்களைத் தவிர்க்க ராமர் கோயிலுக்குச் சென்று வழிபடவும்.மேலும் ''ராம ராம'' என்று நேரம் கிடைக்கும் போதெல்லாம் சிரத் தையுடன் ராம நாம ஜபம் செய்யவும்.



## இடபம்

(கார்த்திகை 2, 3, 4, ரோகிணி, மிருகசீரிடம் 1, 2)

எதிர்நீச்சல் போட்டு வாழ்க்கையில் வெற்றியடையத் துடிக்கும் இடப ராசி நேயர்களே!

உங்களுக்கு இந்த ஆங்கிலப் புத்தாண்டு புதிய உத்வேகத்துடன் உதயமாகிறது. உங்கள் ராசியாதிபதி சுக்கிரன், பாக்ய ஸ்தானத்தில், பாக்ய ஸ்தானாதிபதியின் வீட்டில் அமர்ந்து சௌபாக்கியத்தைத் தரும் நிலையில் உள்ளார். அதோடு தர்ம கர்மாதிபதியான சனி பகவான் சதுர்த்த கேந்திரத்தில் அமர்ந்து தொழில் ஸ்தானத்தைப் பார்த்து, தொழிலில் ஸ்திரத் தன்மையைக் கொடுப்பார். பத்தாம் இடத்தில் இருக்கும் ராகுவும், சுகஸ்தானத்தில் இருக்கும் கேதுவும், எதிலும் பதற்றத்தையும், சிறு சஞ்சலத்தையும் கொடுத்தாலும், தொழிலில் புதிய மாற்றங்கள் உண்டாகும். இருப்பினும் எதையும் நிதானத்துடன் செய்யும் பழக்கத்துக்கு உங்களை வழக்கப் படுத்திக் கொள்ளுங் கள்.

அதேநேரம் குருபகவான் ஸ்திரமான' நிலையில் சப்தம ஸ்தானத்தில் இருக்கிறார். அவரின் அருட்பார்வை லாபஸ்தானத்தின் மீதும், ராசியின் மீதும், தைரிய ஸ்தானத்தின் மீதும் விழுவது சிறப்பு. அதனால் உங்களுக்கு இந்தப் புத்தாண்டு ஓரளவு அதிர்ஷ்டகரமாக, ஆனந்தமாகத்தான் இருக்கும்.

நடக்கவே நடக்காது என்று நினைத்திருந்த பணிகள் நிறைவேறும். பொருளாதாரத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் தீரும். கடன்கள் கட்டுக்குள் அடங்கி இருக்கும். வழக்கு விடயங்களில் வெற்றி கிடைக்கும்.

அதேசமயம் வருடத்தின் பிற்பகுதியில் சிறிது செலவுகள் அதிகரிக்கும். சேமிப்பை எடுத்துச் செலவு செய்ய நேரிடலாம். குறிப்பாக தகப்பனாரின் ஆதரவு குறையலாம்.

அதனால் துணிந்து செய்யும் வேலைகளில் கவனமாக இருக்கவும் மேலும் பூர்வீகச் சொத் துக்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளிலும் நிதானத்தைக் கடைப் பிடிக்கவும்.

இந்த ராசி உத்யோகஸ்தர்களுக்கு அலுவலகப் பணிகள் அனைத்தும் வெற்றிகரமாக முடியும். எதிர்வரும் இடையூறுகளை சாதுர்யமாகச் சமாளிப்பீர்கள். உங்களிடம் மேலதிகாரிகள் நட்புடன் நடந்து கொள்வார்கள். உங்களுக்கு சிறு தொல்லைகள் கொடுத்து வந்த சக ஊழியர்கள் அடங்கிவிடுவார்கள். பண வரவிற்கும் எந்தக் குறைவும் வராது.

வியாபாரிகளுக்கு கொடுக்கல் - வாங்கல் விஷயங்கள் சீராக இருந்தாலும் கூடுதல் அக்கறையோடு வியாபாரம் செய்யவும் சில நேரங்களில் கடும் போட்டிகளை நீங்கள் சந்திக் நேரிடும்.

இதனால் மறைமுக எதிர்ப் புக்களையும் சமாளிக்க வேண்டி வரலாம். ஆகவே எதிலும் விழிப்புடன் இருக்கவும். புதிய முதலீடுகளை நன்கு ஆலோசித்த பிறகே செய்யவும்.


விவசாயிகள் உழைப்பிற்கு ஏற்றவாறு பலன்களைப் பெறுவார்கள். குடும்பத்தில் சுபகாரியங்களை நடத்தி மகிழ்வார்கள். கால்நடை களால் கூடுதல் நலம் பெறுவார்கள். நெல் விளைச்சல் சாதகமாக இருக்கும் அதே சமயம். புதிய குத்தகைகளை நாடிச் செல்ல வேண்டாம். அரசியல் வாதிகள் அனைவரையும் அரவணைத்துச் செல்லவும் அதேநேரம் கட்சி மேலிடத்தில் உங்கள் கோரிக்கைகள் அனைத்தும் நிறைவேறும். அரசு அதிகாரிகளிடம் உங்களுக்கு செல்வாக்கு அதிகரிக்கும். எதிரிகளை இனம் கண்டு ஒதுங்குவீர்கள்.

கலைத்துறையினரின் முயற்சிகள் வெற்றி பெறும் அதனால் புகழைத் தக்கவைத்துக் கொள்வீர்கள். உங்களின் படைப்புகளை புதிய வடிவத்தில் தருவீர்கள். மற்றபடி சக கலைஞர்களிடம் நட்புடன் நடந்து கொண்டு புதிய ஒப்பந்தங்களைப் பெறவும் ரசிகர்களின் ஆதரவு பெற்று கலைப் பயணங்களை மேற்கொள்ளவும்.

பெண்மணிகள் கணவரிடம் ஒற்றுமையோடு பழகுவார்கள். குடும்பத்தில் சந்தோஷத்தைக் காண்பார்கள். உடல் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆன்மீகச் சுற்றுலா சென்று வருவதற்கு வாய்ப்புகள் கிடைக்கும். அதேநேரம் பேசும் நேரத்தில் நிதானத்தைக் கடைப் பிடிக்கவும்.

மாணவமணிகள் படிப்பில் எதிர்பார்த்த மதிப்பெண்களை அள்ளுவார்கள். பெற்றோர்களின் ஆதரவுடன் வெளி விளையாட்டுக்களில் ஈடுபட்டு வெற்றியடைவார்கள். அதேசமயம் புதிய நண்பர்களை அதிகம் நம்ப வேண்டாம்.

*பரிகாரம்*:-சிவபெருமானையும், சூரியபகவானையும் வழிபட்டு வரவும். நேரம் கிடைக்கும் போதெல்லாம் ''நமசிவாய'' என்று உச்சரிக்கவும்.



## மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3)

தெய்வ பலத்தின் துணையுடன் புத்திசாலித்தனத்தால் வாழ்க்கையை அர்த்தமுள்ளதாக்கிக் கொள்ளும் மிதுன ராசி நேயர்களே!

இந்தப் புத்தாண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிக்கு உரிய புதன் பகவான் சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் உங்களின் தேகப் பொலிவு கூடும். வசீகரத் தோற்றத்தைப் பெறுவீர்கள். ராசியாதிபதியுடன் தைரிய ஸ்தானாதிபதி சூரியன் இணைந்து புத ஆதித்ய யோகத்தைக் கொடுப்பார். எனவே அதிர்ஷ்டகரமான வாய்ப்புகளைப் பெறுவீர்கள். நீங்கள் ஏழரை நாட்டு சனி முடியும் கட்டத்தில் உள்ளீர்கள். ஆனாலும் இந்தக் கால கட்டத்தில் கேந்திராதிபத்ய தோஷமும் பாதகாதிபத்ய தோஷமும் நீங்கப் பெற்ற குருபகவானின் கனிந்த பார்வை உங்கள் ராசியின் தொழில் ஸ்தானத்தின் மீதும், விரய ஸ்தானத்தின் மீதும், தன ஸ்தானத்தின் மீதும் படிகிறது. எனவே தொழிலில் நிலவி வந்த ஏற்றத் தாழ்வுகள் நீங்கும். எதிர்காலத்தைப் பற்றி அதிகமாகக் கவலைப் பட வேண்டிய நிலை மாறும்.

ராசிக்கு தைரிய ஸ்தானத்தில் கேது பகவானும், பாக்ய ஸ்தானத்தில் ராகு பகவானும் இருப்பதால் உங்களுக்கு நியாயமாக வர வேண்டிய பாக்கிகள் வந்து சேரும். தகப்பனாரின் ஆதரவு அமோகமாகக் கிடைக்கும். குழப்பங்கள் குறைந்து, தெளிந்த மனத்துடன் செயலாற்றுவீர்கள். மனச் சோர்வு அகன்று, வசீகரப் புன்னகையினால் அனைவரையும் கவருவீர்கள். குடும்பத்தில் நிம்மதியைக் காண்பீர்கள். பொருளாதாரத்தில் ஏற்றங்கள் உண்டாகும். அதேநேரம் வருடத்தின் (பிற்) பகுதியில் அநாவசியப் பிரயாணங் களைத் தவிர்க்கவும் தவிர எவருக்கும் முன் ஜாமீன் போட்டு பணம் வாங்கித் தர வேண்டாம்.

இந்த ராசி உத்தியோகஸ்தர்கள் அலுவலக வேலைகளைத் திட்டமிட்டு முன் கூட்டியே செய்து முடிக்கவும் உங்கள் கடமைகளிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கவும். எனினும் சில நேரங்ளில் நீங்கள் இடையூறுகளைச் சந்திக்க நேரிடும். அதே சமயம் பண வரவுக்குத் தடைகள் வராது. எதிர்பார்த்த சம்பள உயர்வு, சரியான நேரத்தில் வந்து சேரும். இருப்பினும் மேலதிகாரிகளின் ஆதரவு சற்று குறைந்து காணப்படுவதால் கவனமாகப் பணியாற்றவும்.

இந்த ராசி வியாபாரிகள் விற்பனைப் பிரதிநிதிகளை நியமித்து வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வார்கள். கொடுக்கல் வாங்கல் விஷயங்கள் நன்றாகவே இருக்கும். கடன்களைப் பெற்று கடையைச் சீரமைப்பீர்கள். புதிய சந்தைகளில் உங்கள் பொருட்கள் விற்பனையாகும்.

விவசாயிகளுக்கு மகசூல் நன்றாக இருக்கும். புதிய கழனிகளை வாங்குவீர்கள் .மற்றபடி கால்நடைகளுக்கும், புழு பூச்சி ஒழிப்புக்கும் சற்று செலவு செய்ய நேரிடும்.மேலும் பாசனத்துறையில் கூடுதல் கவனம் செலுத்தவும்.

அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை தொண்டர்களின் ஆதரவுடன் செயற்கரிய செயல்களைச் செய்வார்கள். அதேசமயம் எதிரிகளிடம் கவனமாக இருக்கவும்.கட்சித் தலைமையிடம் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ளவும். சச்சரவுகளை ஏற்படுத்தும் விஷயங்களில் வாயைக் கொடுத்து மாட்டிக் கொள்ள வேண்டாம்.

கலைத்துறையினரின் எண்ணங்கள் அனைத்தும் ஈடேறும். அனைத்துச் செயல்களையும் நேர்த்தியுடன் செய்து முடிப்பீர்கள். புதிய நண்பர்களால் பலன் அடைவீர்கள்.படைப்புக்களை உருவாக்குவதில் முனைப்புடன் ஈடுபடுவீர்கள். சக கலைஞர்களும் உங்களை அனுசரித்து நடந்துகொள்வார்கள்.

பெண்மணிகளுக்கு கணவரிடம் அன்பும், பாசமும் அதிகரிக்கும். உறவினர்கள் உங்களை அனுசரித்துச் செல்வார்கள். புதிய ஆடை அணிமணிகளை வாங்கி மகிழ்வீர்கள். மனதிற்கினிய செய்திகளைக் கேட்பீர்கள்.

மாணவமணிகள் கல்வியிலும், உள்ளரங்கு விளையாட்டிலும் நன்கு தேர்ச்சி பெறுவார்கள். ஆசிரியர்களின் பாராட்டுக்களைப் பெற்று மகிழ்வார்கள். மேலும் அதிக மதிப்பெண்களைப் பெற, போதிய பயிற்சி எடுத்து படிக்கவும்.

*பரிகாரம்*:- தட்சிணாமூர்த்தியையும், நவக்கிரகத்தில் குருபகவானையும் தரிசித்துவாருங்கள். (தொடரும்)

பொது வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள் அதைக் கவர்ச்சி மிக்க பலன்கள் கிட்டும் வாழ்க்கையாகக் கருதக் கூடாது.
-டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

## தட்டுப்பாடான பொருள்களை வழங்க உரிய நடவடிக்கை தேவை

யாழ்.குடாநாட்டில் அத்தியாவசியப் பொருள்களின் தட்டுப்பாடு இன்னமும் நீங்கவில்லை. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்படும் உணவுப் பொருள்கள் குடாநாட்டு மக்களின் உயிரைப் பாதுகாக்கிறது எனலாம்.

இதைவிட சந்தைப்படுத்தல் திணைக்களம் மற்றும் சமாசம் என்பவற்றினூடாக வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்கள் எல்லோரையும் சென்றடையாத நிலைமையில் காணப்படுகின்றது.

இதைவிட படையினர், பொலிஸார் என்ற தரப்பினரும் அத்தியாவசியப் பொருள்களை ஆங்காங்கே விநியோகிக்கின்றனர்.

இத்தகைய வழங்கல்கள் எல்லா மக்களுக்கும் கிடைப்பதில்லை. அதேநேரம் படையினர் அத்தியாவசியப் பொருள்களை விநியோகிப்பதன் காரணம் என்ன? என்றும் படையினர் விநியோகிக்கும் பண்டங்களை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் விநியோகிக்குமாயின், அதனை எல்லோரும் ஏற்றுக் கொள்ள முடியுமல்லவா? என்றும் பொதுமக்களிடமிருந்து கருத்துக்கள் எழுந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இதில் இருக்கக் கூடிய நியாயப்பாடுகளை உரியவர்கள் பரிசீலிப்பது சமத்துவமான பங்கீட்டுக்கு உதவுவதாக இருக்கும் என்ற வகையில் அதனை ஒருபுறத்தில் வைத்துவிடலாம்.

ஆனால் சந்தைப்படுத்தும் திணைக்களங்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்கள் போன்றவற்றினால் வழங்கப்படும் அத்தியாவசிய- நானாவிதப் பொருள்களும் எல்லோருக்கும் கிடைப்பதற்கான ஒழுங்கு முறைகளை யாழ்.அரச அதிபர் செய்வார் என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு.

மேற்குறிப்பிட்ட நிலையங்களில் விநியோகிக்கப்படும் பொருள்களை ஒருகுறிப்பிட்ட தொகையினரே திரும்பத் திரும்பப் பெற்றுக் கொள்கின்றனர்.

எனவே எல்லா மக்களும் அவற்றைப் பெறக் கூடிய வகையில் நடவடிக்கையும் பதிவு முறைகளும் செய்யப்பட வேண்டும்.

குறித்த ஒரு தொகையினர் மட்டுமே மேற்படி நிலையங்களிலிருந்து பொருள்களைப் பெறுவதால் அங்கு நீண்ட வரிசை அதிகாலை முதல் காத்து நிற்கின்றது.

இதனைப் பார்க்கும் போது சந்தைப்படுத்தல் திணைக்களம் மற்றும் சமாசம் என்பன காத்திருப்போருக்கு உணவுப் பொருள்களை வழங்கும் அமைப்புக்களா? என்ற கேள்வியை முன்நிறுத்துகின்றது.

எனவே தட்டுப்பாடான பொருள்கள் ஒழுங்கான முறையில் அனைவருக்கும் கிடைப்பதற்கான ஏற்பாடுகள் தேவையானதாகும்.

# ஐக்கிய நாடுகள் சபைச் செயலாளரின் பிரதம தலைமை அதிகாரியாக இந்தியர்

(புதுடில்லி)

ஐ.நாவின் புதிய செயலாளர் நாயகம் பான்கிமூன் தனது பிரதம தலைமை அதிகாரியாக இந்தியாவின் சிரேஷ்ட இராஜதந்திரி விஜய் நம்பியாரையும் ஹேய்ட்டி பத்திரிகையாளர் மைக்கெலி மொன்டாஸை பேச்சாளராகவும் நியமித்திருக்கின்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்குறித்த நியமனங்களை உத்தியோகபூர்வமாக அறிவித்த போது பான்கிமூன் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

எனது குழுவை உருவாக்குவதற்கு உறுதி அடித்தளமதாக இந்த நியமனங்கள் உதவும் எனவும் அத்துடன் செயலக மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுக்கவும் தொடர்ச்சியான மாற்றத்தை ஏற்படுத்தவும் இவை உதவும் என்றும் கூறினார்.

நம்பியாரை நீண்டகாலமாகத் தமக்குத் தெரியுமெனவும் இருவரும் ஆழ்ந்த நம்பிக்கையும் பரஸ்பரம் மரியாதையும் கொண்டிருப்பதாகவும் பான்கிமூன் குறிப்பிட்டிருக்கின்றார்.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த நம்பியார்; இது ஒரு பாரிய பொறுப்பு என்றும் தன்மீது நம்பிக்கை வைத்திருப்பதன் மூலம் செயலாளர் நாயகம் தன்னைக் கௌரவித்திருப்பதை தன்னால் உணர முடிவதாகவும் கூயிருக்கின்றார்.

இந்திய வெளிவிவகார சேவையில் பல சிரேஷ்ட பதவிகளை வகித்தவர் நம்பியார். அத்துடன் ஐ.நாவில் பணியாற்றுவது தொடர்பாகவும் சிறந்த பரிச்சயத்தை கொண்டுள்ளவர். கொபி அனானின் விசேட ஆலோசகராகவும் பணியாற்றியவர் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. (ச)

# தற்காலிக போர்நிறுத்தம் ஒன்றை அரசு-புலிகள் அமுல்படுத்த வேண்டும்

## ஐக்கிய தேசியக் கட்சி கோரிக்கை

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமானால் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உடனடியாக தற்காலிக போர்நிறுத்தத்தினை அமுல்படுத்தவேண்டும்.நம்பிக்கையைக் கட்டி எழுப்பிக் கொள்ள வேண்டும்.

இல்லாவிடின் நாட்டின் பாதுகாப்புக் கேள்விக் குறியாகிவிடும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்பு நாளுக்குநாள் கேள்விக்குறியான நிலைமைக்குச் சென்று கொண்டிருக்கின்றது.அரசாங்கம் இவ்விடயம் குறித்து கவனம் செலுத்த வேண்டும். நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமைக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அத்தகைய சூழலில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீள ஆரம்பிக்கப்படுமா? என்று கேட்ட போது அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது;

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் உடனடியாக யுத்த நிறுத்தம் ஒன்றுக்கு வர வேண்டும். அதன் மூலம் இரு தரப்பினருக்கும் மத்தியில் நம்பிக்கை கட்டி எழுப்பப்பட்டு பேச்சுவார்த்தைக்கான சூழல் உருவாக்கப்பட வேண்டும்.

போர்நிறுத்த உடன்படிக்கைப் பலப்படுத்தப்பட வேண்டும். அந்த உடன்படிக்கையை உருவாக்கிய கட்சி என்ற வகையில் எமது கட்சி இதனை வலியுறுத்திக் கூறுகின்றது. அந்த வகையில் அரசாங்கமும் விடுதலைப்புலிகளுக்கும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வாக அரசாங்கத்தினால் உடனடியாக அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்படவேண்டும். சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

நாட்டில் சமாதான சூழல் நிலவாவிடின் தற்போது இடம் பெற்று வருகின்ற படுகொலைகள் அதிகரித்துவிடும். அத்துடன் பொருளாதாரம் மேலும் வலுவிழந்து விடும்.

இதேவேளை புத்திஜீவிகள் குழுவின் பெரும்பான்மை உறுப்பினர்கள் முன்வைத்துள்ள அதிகாரப் பகிர்வுஅடிப்படையிலான யோசனைகள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியினால் தற்போதைக்கு எதையும் கூற முடியாது.

காரணம் அரசாங்கம் இதுவரை இந்த யோசனைகள் தொடர்பில் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. அரசாங்கம் தனது கருத்தைத் தெரிவித்தால் மட்டுமே தமது நிலைப்பாட்டை அறிவிக்க முடியும்.

விரைவில் இடம்பெறவுள்ள சர்வ கட்சி ஆலோசனைக் கூட்டத்தின் போது இவ்விடயங்கள் குறித்துக் கலந்துரையாடப்பட்டால் நாம் எமது நிலைப்பாட்டை அறிவிப்போம் என்றார் அவர். (எ)

# இளம் குடும்பஸ்தர் கடத்தப்பட்டார்

சுண்டுக்குளி றக்கா வீதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு ஹலோ ரெஸ்ட் மிதிவெடி அகற்றும் பணியாளர் ஒருவர் ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்என யாழ்.மனித உரிமை ஆணைக்குழுவில் உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடத்தப்பட்டவர் சுப்பிரமணியம் பரமேஸ்வரன்(வயது-29) என்ற குடும்பஸ்தரேயாவார். பொலிஸார் வந்துள்ளோம் வீட்டைச் சோதனை செய்ய வேண்டும் என கத்தியதாகவும் எனினும் வீட்டுக் கதவை திறக்காத போது கதவை உடைத்து வந்து குறித்த குடும்பஸ்தரை ஆயுததாரிகள் கடத்திச் சென்றுள்ளதாக அம் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# அதிபர் சேவைக்கு நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவைப் போட்டிப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் ஆட்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் மாகாண மட்டத்தில் ஜனவரி முற்பகுதியில் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளைக் கல்வியமைச்சு மேற்கொண்டு வருகின்றது. இலங்கை அதிபர் சேவை தரம்2:II, இலங்கை அதிபர் சேவை தரம் 3 ஆகிய பதவி வெற்றிடங்களுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சைகள் கடந்த வருட முற்பகுதியில் நடைபெற்றன.

போட்டிப் பரீட்சையின் உயர் புள்ளி பெற்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இரண்டு பெறுபேறுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நியமனங்கள் வழங்கப்படவுள்ளன. (ச-5)

# வாகனச் சாரதி அனுமதிப் பத்திர பரீட்சைகள் திங்கள் முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான எழுத்து மற்றும் செயல்முறைப் பரீட்சைகள் எதிர்வரும் 8 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவுள்ளது. சாரதி அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ள விண்ணப்பம் செய்த பரீட்சார்த்திகள் மேற்குறித்த திகதி தொடக்கம் தங்கள் எழுத்து மற்றும் செயல்முறைப் பரீட்சைகளுக்கான திகதிகளை யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பெற்றுக் கொள்ளுமாறும் 8 ஆம் திகதியன்று எழுத்துப் பரீட்சை மற்றும் செயல்முறைப் பரீட்சைக்குத் தோற்ற விரும்புபவர்கள் முற்பகல் 10 மணிக்கு முன்னர் உரிய ஆவணங்களுடன் சமுகமளிக்குமாறும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

# பனிஸ் உற்பத்திக்கு அனுமதியளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பேக்கரிகள் அனைத்திற்கும் பனிஸ் தயாரிப்பதற்கு அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகள் ஆரம்பித்துள்ள நிலையிலும் தற்போது போதுமான அளவு மா மற்றும் சீனி பேக்கரிகளுக்கு வழங்கப்படுவதனாலும் இவ் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இதேவேளை நேற்று முன்தினம் பேக்கரி உரிமையாளர்களுக்கும் இராணுவ உயர் அதிகாரிகளிற்கு மிடையிலான சந்திப்பொன்று பலாலியில் நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

# யாழ்.உற்பத்திப் பொருள்கள் லிபர்பூல் கப்பலில் அனுப்பி வைப்பு

யாழ்ப்பாண உற்பத்திப் பொருள்களான புகையிலை, வெங்காயம் மற்றும் சுருட்டு என்பன லிபர்பூல் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

இவற்றில் 400 மெற்றிக்தொன் புகையிலை, 300 மெற்றிக்தொன் வெங்காயம்மற்றும் 5 மெற்றிக்தொன் சுருட்டு ஆகியன அடங்குகின்றன.

இப்பொருள்கள் யாழ்.உற்பத்திகளைச் சந்தைப்படுத்தும் நோக்கிலேயே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் க.கணேஷ் மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

# மண்ணெண்ணெய் பெறுவதற்கு முண்டியடிக்கத் தேவையில்லை

## அரச அதிபர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அனைத்து மக்களுக்கும் தட்டுப்பாடின்றி மண்ணெண்ணெய் வழங்கப்படும். அதனைப் பெற எவரும் முண்டியடிக்கத் தேவையில்லை என யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்துள்ளார்.

சிலர் மேலதிகமாக மண்ணெண்ணெய் பெற முற்படுவதனால் எரிபொருள் விநியோகத்தில் தாமதம் ஏற்படுகின்றது. இதனால் எரிபொருள்களின் விநியோகம் தடைப்படும் நிலை ஏற்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

# ஏழு இராணுவத்தினர் நேற்று நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு புலனாய்வு தகவல்களை வழங்கினார்கள் என்ற சந்தே கத்தின் பேரில் கைதான இராணுவ மேஜர் உட்பட ஏழு பேர் நேற்று கொழும்பு நீதி மன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட் டனர்.சந்தேக நபர்கள் கடுமையான பாது காப்பின் மத்தியில் முகம் மூடப்பட்ட நிலை யில் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டனர். பயங்கரவாத தடுப்பு சட்டப் பிரிவின் அதிகாரிகளினால் இவர்கள் தொடர்பான அறிக்கையொன்று கொழும்பு தலைமை நீதிமன்ற நீதிவான் சறோஜினி வீரவர்த்தனா விடம் சமர்ப்பிக்கப்பட்டது.

வங்கிக் கணக்குகள் தொடர்பான விசார ணைகளை மேலும் மேற்கொள்ளவேண்டிய அவசியம் இருப்பதாகவும் நீதிமன்றில் புல னாய்வு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ச-3)

## திடீர்த் தேர்தலுக்கு...

வடக்கு-கிழக்குப் பிரச்சினை தொடர்பில் அரசாங்கம் சரியான பாதையில் செல்கின்றது. எனவே அதனைப் பயன்படுத்தி இழந்து வரும் மக்களின் செல்வாக்கை பொதுத் தேர் தல் ஒன்றை நாடி பிடித்துப் பார்க்கலாம் என்ற ஆலோசர்களின் பரிந்துரைகளுக்கமையவே அரசாங்கம் இப்போது காய்களை நகர்த்தி வருகின்றது.

பொதுத் தேர்தலையோ அல்லது கிழக் கில் மாகாண சபைத் தேர்தலையோ நடத்து வதற்கான சாத்தியங்கள் அதிகரித்துள்ளன. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வரலாற்றில் தனித்து நின்று போட்டியிட்டு வெற்றி பெற்ற தில்லை.கூட்டணி அமைத்துத்தான் அக்கட்சி தேர்தல்களைசந்திக்கும் ஆனால் ஜே.வி.பி. எந்தத் தேர்தலையும் தனித்து நின்று சந்திப்ப தற்குத் தயாராகவே இருக்கின்றது.

தற்போதைய அரசாங்கத்தின் பெரும் பான்மை பலம் ஊசலாடுகின்றது அசைந்து கொண்டிருக்கின்றது. அதனை நிலைப்படுத் திக்கொள்ள ஏனைய சில கட்சிகளையும் இணைத்துக்கொண்டு அரசாங்கம் பொதுத் தேர்தல் ஒன்றுக்குத் தயாராகின்றது. இவ் வாறு லால் காந்தா கொழும்பில் ஊடகம் ஒன் றுக்குத் தெரிவித்திருக்கின்றார். (ச-5)

## அலம்பில்...

தாக்குதலின் போது குடியிருப்பில் வாழ்ந்த மக்கள் சிதறி ஓடிப் பாதுகாப்பை தேடிக்கொண் டதால் இழப்புக்கள் ஏற்படவில்லை என கூறப்பட்டது.

இதே குடியிருப்பின் மீது நேற்று முன் தினம் வியாழக்கிழமை கிபீர் விமானங்கள் நடத்திய குண்டு வீச்சில் 7 பொதுமக்கள் காய மடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## வவு.கல்விக்கல்லூரியில் பரீட்சை நடத்த ஏற்பாடு

யாழ்.தேசிய கல்விக்கல்லூரியில் தமிழ் மொழி மூலமாக கல்வி பயிலும் வெளிமா வட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சை வவுனியா கல்விக்கல்லூரி யில் நடத்தப்படும் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது குறித்து கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; யாழ்.தேசிய கல்விக்கல்லூரியில் தமிழ் மொழி மூலமாக கல்வி பயிலும் வெளிமாவட் டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான இறுதிப்பரீட்சை வவுனியா கல்லூரியில் நடத் தப்படும். அத்துடன் சேவைக்காலப் பயிற்சிக் காக அவர்கள் வவுனியா கல்விக் கல்லூரியு டன் இணைந்த வவுனியா பிரதேசத்திலுள்ள பாட சாலைகளுக்கே நியமிக்கப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டது. (ச-5)

## படுகாயமடைந்தவர் மரணமானார்

வடமராட்சி வதிரி கரவெட்டிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த குடும்பஸ்தர் அன்றிரவு சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்தார்.

படுகாயமடைந்த நிலையில் யாழ்.போத னா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டி ருந்த திரவியம் சற்குணம் (வயது 30) என பவரே உயிரிழந்தவராவார். (ச-10)

## கப்பலில்...

தமக்கு வழங்கப்பட்ட விலையிலிருந்து ஒரு ரூபாய் சேவைக்கட்டணம் இட்டு வழங்க வேண்டு மெனவும் தெரிவித்த அரச அதிபர் தனியார் கடைகள் பெற்றுக் கொண்ட விலை யிலிருந்து 2 ரூபாய் இலாபம் வைத்து பொருட்களை விற்பனை செய்யலாமென வும் தெரிவித்தார். (ச-5)




மன்னார் இலுப்பைக்கடவையில் விமானப்படையினர் நடத்திய குண்டு வீச்சுத் தாக் குதலை கண்டித்து கிளிநொச்சியில் நேற்று கண்டனப் பேரணி நடைபெற்றது.

# தற்போதைய அரசியலமைப்பால் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது

## பிரதியமைச்சர் டிலான் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

நாட்டின் அரசியலமைப்பு உடனடியாக திருத்தப்படவேண்டும் அல்லது மாற்றப்பட வேண்டும் அரசியல் தீர்மானங்களை மாற் றும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உள்ளமை ஆரோக்கியமான விடயமல்ல.

இந்த அரசியலமைப்பு தொடர்ந்து இருந் தால் நாட்டில் இனப்பிரச்சினையை தீர்க்க வும் முடியாது. அரசாங்கத்தால் அரசியல் தீர் மானங்களை மேற்கொள்ளவும் முடியாது என்று நீதி மற்றும் நீதிமன்ற மறு சீரமைப்பு விவகார பிரதியமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

எமது அரசியலமைப்பில் அதிகமான குறைபாடுகள் காணப்படுகின்றன. வட-கிழக்கு பிரிப்பானது இனப்பிரச்சினை தீர்வு தொடர் பான சாத்தியத்தை தள்ளி வைத்துள்ளது.

தொடர்ச்சியாக அரசியல் தீர்மானங்கள் நீதிமன்றத்தால் மாற்றப்பட்டு வந்தால் சிங் கள மக்களுடைய நீதிமன்றமே நாட்டில் உள் ளது. என்று தமிழ் மக்கள் கருதி விடுவார்கள் என்றும் அவர் மேலும் கூறினார்.

வடக்கு கிழக்கு பிரிப்புத் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார். இவ் விடயம் தொடர் பில் அவர் மேலும் கூறியதாவது;

இந்த நாட்டின் அரசியலமைப்பில் பல் வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அரசியல் தீர்மானங்களை நீதிமன்றத்தால் மிக எளிதில் மாற்றிவிடக்கூடிய வகையில் அரசியலமைப்பு உள்ளது.

வடக்கு கிழக்கு இணைப்பானது அப் போதைய அரசாங்கத்தின் அரசியல் தீர்மா னமாகும். ஆனால் மேற்படி அரசியல் தீர்மா னம் நீதிமன்றத்தினால் மாற்றப்பட்டுள்ளது.

இதற்கு நாங்கள் நீதிமன்றத்தைக் குறை கூறுவதில் அர்த்தம் இல்லை காரணம் எமது அரசியலமைப்பு அவ்வாறு அமைந்துள்ளது.

வடக்கு கிழக்கு சர்வஜன வாக்கெடுப்பு அல்லது பாராளுமன்றத்திற்கு சட்டமூலம் கொண்டுவரப்பட்டு பிரிக்கப்பட்டிருந்தால் அதனை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அர சியல் தீர்மானத்தை மாற்றும் வகையில் நீதி மன்றத்தால் வடக்கு கிழக்கு பிரிக்கப்பட்டமை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான சாத்தி யத்தை தள்ளிவைத்துள்ளது என்றே கூற வேண்டும்.

அதேபோல் போர் நிறுத்த உடன்படிக்கை திருத்தப்பட்டு பலப்படுத்தப்படவேண்டும். தற் போது செயலிழந்துள்ள போர் நிறுத்த உடன் படிக்கையை செயற்பாட்டு ரீதியான உடன் படிக்கையாக மாற்றியமைக்க வேண்டும். (ச-5)

# தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகம் இராணுவத்தினரால் சோதனை

## பணியாளர்கள் நால்வர் கைது

வவுனியா குருமன்காட்டிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகம் நேற்று முற் பகல் 11.30 மணியளவில் இராணுவத்தினரா லும் பொலிஸாராலும் சோதனை செய்யப் பட்டுள்ளது.

அங்கு பணிபுரிந்த சத்தியமூர்த்தி, திட்ட அலுவலர் பி.தேவராஜா,கணக்காளர் நிரோ ஷா, அலுவலக உதவியாளர் பிரியா ஆகி யோரே இராணுவத்தினரால் கைதுசெய்யப் பட்டுள்ளதாக கொழும்பிலுள்ள தமிழர் புனர் வாழ்வுக்கழக அதிகாரி ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அலுவலகத்தில் காணப்பட்ட ஆவணங் களும் பத்திரங்களும் பொலிஸாரால் லொறி மூலம் வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதாக தெரிய வருகிறது.

அதேவேளை திருகோணமலையில் உள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவல கமும் பொலிஸாரால் சோதனை செய்யப்பட் டுள்ளது. அதேவேளை திருகோணமலை மற்றும் அம்பறை மாவட்டங்களிலுள்ள தமி ழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அலுவலங்கள் நேற்று இரகசியப் பொலிஸாரால் சோதனைக் குட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் பேச்சாளர் அர்ச்சுன எதிர சிங்கம் கருத்துத் தெரிவிக்கையில் வவுனியா அலுவலகம் சோதனைக்குட்படுத்தப்பட்ட போது அங்கு பணியாற்றி வரும் நான்கு ஊழியர்கள் இரகசியப் பொலிஸாரால் விசா ரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகத் தெரிவித்தார். (ச-3,5)

## விவசாயத் திணைக்கள...

திணைக்களத்திற்குச் சொந்தமான பிக்கப் வாகனத்தின் மீது நேற் றுக் காலை 8.30 மணியளவில் இத்தாக் தல் நடத்தப்பட்டுள்ளது.

இத் தாக்குதலில் இரண்டு விவசாய திணைக்கள அதிகாரிகள் கொல்லப்பட்டனர். வாகனச் சாரதியும் மற்றொரு பணியாளரும் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக் காக அநுராதபுரம் வைத்தியசாலைக்கு அனுப் பப்பட்டுள்ளனர்.

விவசாயத் திணைக்கள பாடவிதான அதி காரியான வவுனியா பிரெளன் கம்பனியடி யைச் சேர்ந்த வெற்றிவேலு மகேந்திரன் (வயது 56) ,விவசாய அதிகாரியான வவுனி யா பூந்தோட்டத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் கணேசலிங்கம் (வயது 59) ஆகிய இரு வருமே கொல்லப்பட்டுள்ளார்கள்.

வாகனச்சாரதியான வவுனியா பண்டாரிக் குளத்தைச் சேர்ந்த ஆறுமுகம் சித்திரவேலு (வயது 48) பராமரிப்புப் பணியாளரான வவு னியா மதகுவைத்த குளத்தைச் சேர்ந்த கந்த சாமி குருகுலசிங்கம் (வயது 54) ஆகிய இரு வருமே படுகாயமடைந்துள்ளார்கள்.

இச் சம்பவத்தையடுத்து பதவியாப் பகுதி யிலிருந்து இராணுவத்தினர் ஷெல் தாக்கு தல்களை நடத்தியுள்ளதாகவும் இக் கிளை மோர்த்தாக்குதலை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினர் நடத்தியதாகவும் விடு தலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இத் தாக்குதல் நடத்தியவர்களைத் தேடி தமது உறுப்பினர்கள் சுற்றிவளைத்துத் தேடு தலை நடத்தியதாக இளந்திரையன் தெரிவித் துள்ளார். இதேவேளை இத் தாக்குதலுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார். (ச-3,5)

## விமானத் தாக்குதலை...

வேறுப்பாடுகள் இன்றி இலக்கற்ற முறை யில் மக்கள் தாக்கப்பட்டு வருகின்றனர். அப்பாவி மக்கள் மீது விமானக் குண்டு வீச்சுக்களும் எறிகணை வீச்சுக்களும் சர மாரியாக நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த படுகொலைகளின் உச்சத்தை கடந்த செவ்வாய்க்கிழமை விமானப் படையி னரின் குண்டு வீச்சு விமானங்கள் மன்னார் மாவட்டம் இலுப்பைக்கடவை பிரதேச படகுத் துறை கிராமத்தில் நடத்திக் காட்டியுள்ளனர்.

மிகக்கொடூரமான இந்த குண்டுகள் பூப் போன்ற குழந்தைகளைக் கூட பிய்த்து எறி யத் தவறவில்லை. வயோதிபப் பெண்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் ,சிறுவர்கள் உட்பட 16 பேர் அதே இடத்தில் கொடூரமாக கொல் லப்பட்டும் 35க்கும் மேற்பட்டோர் படுகாய மடைந்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்திலிருந்து இடம் பெயர்ந்து படகுத்துறை கிராமத்தில் உரிய அடிப்படை வசதிகள் இன்றி வாழ்ந்த மக்களுக்கே இந்த பேரவலம் நேர்ந்துள்ளது.அரசின் மக்கள் மீதான இந்த கொடூரங்கள் யாவும் சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம்,ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்பு முன்னிலையிலேயே தமிழ் மக்களை நினைத்தவாறு கொடூரமாக கொலை செய்ய முடியும் என்பதை நிரூபித் துள்ளது.

இது தமிழ் மக்களாகிய எமக்கு மிகவும் வேதனையை தருகின்றது. மகிந்த அரசின் கோரத் தாக்குதலும் இந்த பொருளாதாரத் தடையும் தமிழர்களை இனிமேலும் மகிந்த அரசு பாதுகாக்கப் போவதில்லை என்பதினை தெட்டத்தெளிவாக்கியுள்ளது. அனைத்துலக சமூகமே இவற்றிலிருந்து மீள்வதற்கு எமக்கு சலுகைகள் தேவையில்லை உரிமைகளையே யாசித்து நிற்கின்றோம் என அதில் கூறப்பட் டுள்ளது. (ச-5)

## கொழும்பு பயணிகள் பஸ்ஸில்..

கொழும்பிலிருந்து 36 கிலோமீற்றர் தொலைவில் உள்ள நிட்டம்புவ பகுதியிலிரு ந்து சுமார் 80 பயணிகளுடன் கிருல்ல என்ற இடத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்த பயணிகள் பஸ்ஸில் பொருத்தப்பட்டிருந்த குண்டே வெடித்திருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

நேற்று மாலை 6.30 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதன்போது எட்டுப் பயணிகள் சம்பவ இடத்திலேயே உயி ரிழந்தனர். படுகாயமடைந்த 50 இற்கும் மேற்பட்டோர் அருகில் இருந்த வைத்தியசா லைகளில் அனுதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பத்துப் பேரின் நிலை கவ லைக்கிடமாகவுள்ளதாக கொழும்புச் செய்தி கள் தெரிவித்தன. கொழும்பு கண்டி வீதியில் நிட்டம்புவ -கிருல்ல ஆகிய இடங்களுக்கு இடைப்பட்ட பகுதியில் வாகன நெரிசல் அதி கமாக காணப்பட்ட இடத்தில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.குண்டு வெடித்தவுடன் பஸ் தீப் பற்றி எரிந்தாகவும் இதனாலேயே அதிகமா னோர் காயமடைந்ததாகவும் கூறப்பட்டது. இச் சம்பவத்திற்கும் விடுதலைப்புலிகளிற் கும் தொடர்பு இருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க ஏ.எம்.பிக்கு தெரிவித்துள்ளார்.

இதேவேளை இக்குண்டுவெடிப்பையடுத்து கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முடக்கிவிடப்பட்டுள்ளன. சந்திகள் தோறும் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப் பட்டு சோதனை நடவடிக்கைகள் இரவிரவாக மேற்கொள்ளப்பட்டு வருதாக தெரிவிக்கப் பட்டது. (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.[illegible] இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.